www.padippakam.com

Raya

128

# ற்றல்மிகு தோழர்களே!

RAYA
87 RUE DE COLOMBE
92600 ASNIERES SUR
-SEINE ; FRANCE

E.P.R.L.F



ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

AM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

**தோழர்களுக்கு!**

புதிய கண்ணோட்டம் பத்திரிகையில் வெளிவந்துள்ள 'ஆற்றல்மிகு தோழர்களே' கட்டுரைகளின் தொகுப்பே இச்சிறு நூலாகும்.

காலத்தினதும் சூழ்நிலைகளினதும் நெருக்கடியினால் ஈழத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் புதியகண்ணோட்டத்தை முழுமையாக விநியோகிக்க முடியாமற்போனதினைக் கருத்திற்கொண்டே இக் கட்டுரைத் தொகுப்பு வெளிவருகின்றது.

வெளியான புதிய கண்ணோட்ட இதழ்களை மீண்டும் அச்சிடாமல் அதற்கு மாறாக 'இனிய தமிழ் மக்களே' 'ஆற்றல்மிகு தோழர்களே' கட்டுரைகளைத் தனித் தனித் தொகுப்பாக வெளியிடுவதன் பயன் கருதியே முதலில் 'இனிய தமிழ் மக்களே' வெளிவந்துள்ளது. இப்போது இந்நூல்.

தோழர்களோடு கருத்துப் பகிரும் வடிவில் தோழர்கள் மத்தியிலும் அரசியல் ஆர்வம்கொண்ட ஏனையோர் மத்தியிலும் சிந்தனை ஊட்டத்தையும் ஓட்டத்தையும் உருவாக்குவதே இவ்வெளியீட்டின் நோக்கமாகும்.

மக்களின் வாழ்விலிருந்தும் சமுதாயத்தின் எதிர்காலத் தேவையிலிருந்தும் பிரிக்க முடியாத எமது இலட்சிய நோக்கங்களுக்கான பாதையமைப்பில் இவ்வெளியீடு ஒரு செங்கல்லாய் அமையுமென நம்புகிறோம்,

——————பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
——————ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

படிப்பகம்

www.padippakam.com

வெளியான கட்டுரைகளின்
தொகுப்பு—

ஐப்பசி 1988

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின்
பிரச்சார வெளியீட்டுப் பிரிவு

நவயுக அச்சகம்
119 பல்கலைக்கழக வீதி,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

ரூபா 5/-

ஆற்றல்மிகு தோழர்களே!

—'புதியகண்ணோட்டம்' இதழ்களில்
வெளியான கட்டுரைகளின்
தொகுப்பு—

ஐப்பசி 1988

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின்
பிரச்சார வெளியீட்டுப் பிரிவு

நவயுக அச்சகம்
119 பல்கலைக்கழக வீதி,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

ரூபா 5/-

ஆற்றல்மிகு தோழர்களே!

—'புதியகண்ணோட்டம்' இதழ்களில்
வெளியான கட்டுரைகளின்
தொகுப்பு—

ஐப்பசி 1988

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின்
பிரச்சார வெளியீட்டுப் பிரிவு

நவயுக அச்சகம்
119 பல்கலைக்கழக வீதி,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

ரூபா 5/-

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்

பங்குனி 1988

**இனிய தமிழ் மக்களே!**

ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் ஏதோ ஒரு செய்தி இந்தியப் படைகள் பற்றியும் புலிகள் பற்றியும் வந்த வண்ணமே இருக்கின்றன.

இவை இரண்டினதும் யுத்தத்திற்கிடையில் அகப்பட்டுப்போயிருக்கும் நீங்கள் ஒவ்வொரு காலமும் உயிரழிவு, உடமையழிவு மற்றும் துன்பங்கள், அச்சம் என்பனவற்றோடு வாழவிடப்பட்டிருக்கிறீர்கள்.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? ஏன் இந்த நிலை தொடர்கின்றது? என்பதைப் பற்றி மக்கள் என்ற வகையில் நீங்களும்,

மக்களின் உண்மையான நிரந்தரமான அமைதியான வாழ்க்கைக்காகவும், சுரண்டப்படும் ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களின் விடிவுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்களும் மேற்கண்ட வற்றைப் பற்றி சிந்தித்து தெளிவு காணுவதும்,

எம் அனைவரினதும் முன்னால் இன்றுள்ள பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை முற்னெடுப்பதும் அவசியமாகும்.

இதே வேளை புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் எம்மைப் பார்த்து இந்தியாவிற்கு வால்பிடிப்பவர்கள் என்ற பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள்.

இதன் மூலம் அவர்கள் இதுவரையும் மேற்கொண்ட, இப்போதும் மேற்கொண்டுவரும் அரக்கத்தனங்கள் அயோக்கியத் தனங்கள், துரோகத்தனங்களை மறைத்து விடலாம்—மக்களை ஏமாற்றி விடலாம் என கடுமையாகவே முயற்சிக்கின்றார்கள்.

இது பற்றியும் உங்களின் பேரால் செயற்படும் ஸ்தாபனம் என்ற வகையில் உங்களுக்கு எமது அரசியற் கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியது எமது பொறுப்பும் கடமையும் எனக் கூறுகின்றோம்.

அந்த அடிப்படையில் இங்கு உங்கள் முன்னால் சில வினாக்களையும், சில விளக்கங்களையும் முன் வைப்பதன் மூலம் எமது நிலையை எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முயல்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



வெளிநாடுகளிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, உள் நாட்டிலும் சரி புலிகளும் அதன் எடுபிடிகளும் ஆதரவாளர்களும் இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து எம்மையும் வம்புக்கிழுகிறார்கள்

ஆனால் நாங்கள் உங்கள் முன்னால் வைக்கும்
சில கேள்விகள்

1. தாங்க முடியாத துன்பங்கள், தொடர்ச்சியான பல இழப்புக்கள் அத்தனைகளையும் தாங்கிக்கொண்டு நீங்கள் வழங்கிய ஆதரவோடும், தன்னம்பிக்கையோடும் முன்னேறிக்கொண்டிருந்த ஈழவிடுதலைப் போராட்டத்தை சகோதர இயக்கங்கள் மீது யுத்தங்கள் தொடுத்ததன் மூலம் அதனைச் சீரழித்துக் குட்டிச்சுவராக்கி நாசமாக்கியவர்கள் யார்?

2. இந்தியாவின் உணவுப் பொட்டணங்களுக்காக எமது மக்கள் அண்ணாந்து பார்த்திருக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலைகளை உருவாக்கியவர்கள் யார்?

3. புனிதமும், தியாகமும் நிறைந்த எமது இலட்சியப்போராட்டத்தை சாக்கடையாகிப் போன தமிழ் நாட்டு அரசியலுக்குள் கொண்டு போய் விட்டவர்கள் யார்?

அரசியல்வாதிகளிடம் மட்டுமல்லாது தமிழ் நாட்டுப் பொலிஸ் அதிகாரிகளிடமும் கொண்டு போய் எமது போராட்டத்தை அடகு வைத்தவர்கள் யார்?

4. பெரிய இயக்கமென்றும் பலமுள்ள இயக்கமென்றும் சொல்லப்படுகின்ற புலிகள் யாருடைய ஆதரவில்; யாருடைய பணத்தில், எந்த சக்திகளின் ஆயுத உதவிகளால் அவ்வாறு ஆகினார்கள்?

5. இந்தியப்படைகள் இலங்கைக்குள் புகுந்த நேரத்தில் ஒரு பக்கம் எதிர்ப்புப் பிரச்சார நாடக நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு,

மறுபக்கம் இந்தியாவின் அனைத்து வகைப்பட்ட சொகுசுகளையும் அனுபவித்துக் கொண்டு, இன்னொரு பக்கம் இந்தியப் படைகளின் பல்வேறுபட்ட அதிகாரிகளையும் வீடு வீடாக வரவழைத்து விருந்துபசாரம் நடாத்தி பரிசுகளும் வழங்கியவர்கள் யார்?

படிப்பகம்

www.padippakam.com



**இவற்றோடு இன்னும் சில விடயங்களை ஆழமாக நோக்கினால்; இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு மாத காலமாகியும்—**

1. இலங்கைக்குள் வந்த இந்தியப் படைகள் மீண்டும் இந்தியா விற்கு அனுப்பப்பட வேண்டுமென நேர்மையான அரசியல் குரல்கள் எமது நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி, வெளி நாடுகளிலும் சரி எழுப்பப்பட முடியாமல் இருப்பதற்கும்,

   இந்தியப் படைகள் மேலும் பல மடங்கு குவிவதற்கும், தொடர்ந்து அவை இருந்து கொண்டே இருப்பதற்கான நியாயங்களை கூறிக்கொள்வதற்குமான சூழ் நிலைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் யார்?

2. வீடிழந்து வாழ் விழந்து போய் உள்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் அகதிகளாகவும் அனாதைகளாகவும் நிற்கும் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கும்,

   அழிந்து போன தேசம் புனரமைக்கப்படுவதற்கும் முடியாத சூழ் நிலைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் யார்?

3. புலிகளின் நடவடிக்கைகள் சிறீ லங்கா அரசாங்கத்துக்கு எவ்வெவ்வாறெல்லாம் உதவி செய்கின்றன? உதவி செய்து வருகின்றன?

3. 1. சிறீ லங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் நடந்து முடிந்த பேச்சு வார்த்தைகளையும் ஒப்பந்தத்தையும் தனக்குச் சாதகமான வகையில் தந்திரமாக விளக்கம் கொடுப்பதற்கும்,

3. 2. செயற்றிறனும் அதிகாரங்களும் உத்தரவாதங்களும் அற்ற மாகாண சபை அமைப்பை யூ. என். பி. அரசாங்கம் எதிர்ப்புக்கள் சிரமங்கள் எதுவுமின்றிச் சட்டமாக்கிக் கொள்வதற்கும்,

3. 3. காரணம் எதுவுமின்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் அனாவசியமாக சிறீ லங்கா அரசினரால் வாட்டப்படுவதற்கும் மூலகாரணமாய் இருப்பவர்கள் யார்?

சிறீலங்கா அரசின் ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகளுக்கெல்லாம் எதிராக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருந்து ஓர் ஐக்கியப்பட்ட போராட்டம் உருவாக முடியாமலும்,

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களுக்குச் சாதகமான அபிப்பிராயத்தை உலகளாவிய வகையில் திரட்ட முடியாமலும்,

அவற்றின் மூலம் சிறீலங்கா அரசின் மீது நெருக்கடியை உருவாக்க முடியாமலும் இருப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்கள்யார்?

**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**
**புலிகள் இதுவரை தமிழ் மக்களுக்குச் செய்து வந்துள்ள சேவை என்ன?**

1. 1400க்கு மேற்பட்ட சக போராளிகளை படுகொலை செய்திருக்கிறார்கள். வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரக்கணக்கான போராளிகளை காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.
2. அவர்கள் விதிக்கும் வரித்தொகையை எந்தெத் தமிழ்—மகனாவது முழுமையாகச் செலுத்தத் தவறினால் அவனுக்குத் துப்பாக்கிச் சூட்டைப் பரிசாக வழங்கிச் சமூக விரோதி என்ற பட்டமளித்திருக்கிறார்கள்.
3. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமது தாயகம் என்று சொல்லிக் கொண்டாலும் அவை ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்பதில் மூதூர், காத்தான்குடி சம்பவங்கள் மூலம் மிகவும் அக்கறையாகவே செயற்பட்டிருக்கிறார்கள்.
4. தமிழ் மாணவர்களின கல்வியை அழித்தொழிப்பதில், தமிழ் மக்கள் அழிவுகளையே அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்—சிவில் நிர்வாகங்கள் இல்லாமல் தமிழ் பேசும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கவும், அராஜகம் தலைதூக்கி ஆடிக்கொண்டிருக்கவும் வேண்டுமென்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**தமிழ் மக்களே! சிந்தியுங்கள், புலிகள் தமிழ் மக்களின் பாதுகாவலர்களா? சேவகர்களா? அல்லது அழிவுகார நாச சக்திகளா? தீர்மானியுங்கள்!**
**விழித்தெழுங்கள்!**

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்

வைகாசி 1988

எமதினிய தமிழ் மக்களே !

நாளும் பொழுதும் சாவுகள் துன்பங்கள் என மரணத்தின் மத்தியில் வாழ்க்கை இன்னும் ஓய்ந்த பாடாக இல்லை.

பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம், பலகோண வரிச்சுமைகள்.

அரசாங்க ஊழியர் வேலைக்குப் போகமுடியவில்லை....... கொலை மிரட்டல் ..வங்கிகளில்லை. அரசாங்க நிறுவனங்கள் செயற்படவில்லை—இதனால் உரிய சம்பளத்தையும் பெற முடியாமல்;

உத்தியோகம் உள்ளவன் வீட்டிலும் அடுப்படியில் பூனை படுக்கும் நிலை.

நாளாந்தம் கூலி வேலை பார்த்து வயிறு கழுவும் தொழிலாளர்களுக்கு வேலைக்குப் போக வழியில்லை. வீட்டிலோ வறுமையும் பட்டினியும் கோரத்தாண்டவம் ஆடுகின்றன.

கல்வியையே மூலதனமாகக் கொண்ட பொருளாதார அடித்தளத்தில் நிலைகொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தின் இளம் செல்வங்களின் கல்வி தடைப்பட்டுப் போய் நிற்கின்றது. அவர்களின் எதிர்காலம் சூன்யமயமாக்கப்பட்டிருக்கின்றது.

உயிர்ப்பயமற்ற வகையில் எந்தவொரு இடத்திற்கும் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை.

எப்போது, எங்கே, எவ்வளவு பேர், யார் கொலை செய்யப்படுவார்கள் என்று தெரியாத அளவிறகு கொலைகள் மலிந்து போய் இருக்கின்றன.

எங்கு பார்த்தாலும் கொலை வெறி பிடித்த துப்பாக்கிப் பைத்தியங்களே நிலைகொண்டு நிற்கின்றன.

போராட்டம் என்று இருந்த காலத்தில் தான் இரத்த ஆறு ஓடியது என்று பார்த்தால்—

இன்று சமாதானம் என்ற காலத்திலும் கொலைக்களங்கள் தானே மிஞ்சி நிற்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் வாழ்க்கை இவ்வாறு நிலைகெட்டு, அழிபட்டு, நிம்மதியெதுவுமின்றி எந்த நிமிட நேரமும் அவலக் குரல்களே அதிகரித்துப் போயிருக்கும் இந்த நிலையை மாற்றும் நிலைமையேதும் இல்லையா?

இதுவே எம் அனைவரினதும் முன்னால் உள்ள கேள்வி!

**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

இன்றைக்கு இருக்கும் நிலைமைகளோ கொலைகள், துன்பங்கள், அழிவுகள்.

ஆனால் எம் அனைவருக்கும் தேவைப்படுவதோ ஜனநாயகம், சமாதானம், ஒற்றுமை.

ஆகவே இன்றைக்கு இருக்கும் நிலைமைகளை மாற்றியாக வேண்டும். மாற்றத்தை நாம் ஆக்க வேண்டுமானால் முக்கி முனகுவதில் பயனில்லை.

யாருடைய நிலைமை எப்படிப்போனாலும் பரவாயில்லை. தன்னைத்தான் காப்பாற்றிக் கொண்டால் சரி என்று நினைக்கும் நிலை மாறவேண்டும்.

இன்றிருக்கும் இந்த நிலைமைக்கு தமிழ்க்குடிமக்கள் ஒவ்வொருவரும் தாம்தாம் எவ்வளவு பொறுப்புடையவர்கள் என்று கண்டறிய வேண்டும்.

அடிப்படையான காரணங்களைச் சரியாகக் கண்டறியாமல் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் சரியாக உணர்ந்து கொள்ளாமல் மக்களின் நண்பர்கள் யார், மக்களின் விரோதிகள் யார் என்பதை அடையாளம் கண்டு ஒவ்வொருவரும் செயற்படாமல் விட்டால் இன்றைய நிலையை மாற்றவே முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட்டம் தமது கையில் அதிகாரம் கிடைக்கும்வரை தமிழ் மக்களின் வாழ்க்கையை அழித்தொழிப்பது என்றுகங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்திய அரசாங்கமோ புலியைப் பிடித்தல் என்ற பெயரில் வெண்கலக்கடைக்குள் யானை புகுந்த வகையாகச் செயற்பட்டு வருகின்றது.

சிறீலங்கா அரசாங்கமோ புனர்வாழ்வு, புனரமைப்பு, சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தல் ஆகிய எல்லாவற்றையும் மூடிக்கட்டி வைத்துவிட்டு வடக்கு கிழக்கு

படிப்பகம்

www.padippakam.com



நிலைமைகளைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கின்றது.

இவற்றிற்கிடையில் அகப்பட்டுப்போயிருக்கும் நமது நிலையோ ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டிற்குமிடையில் அழகிய கலைமான் என்ற கணக்கில் தான் ஆகிப்போயிருக்கின்றது.

தமிழ்மக்கள் ஒருகாலத்தில் தமக்கிடையில், சிங்கள மக்களைப் பார்த்து 'சிங்கள மோடயா' என்று கூறிக்கொண்டிருந்த அந்தத் தறிகெட்ட தற்பெருமை வார்த்தைப் பிரயோகங்களை எண்ணிப்பார்க்க எமக்கே வெட்கமாக இல்லையா?

இன்றைக்கு தமிழனைப் பார்த்து இந்த உலகம் முழுவதும் 'மடையர்கள்' என்று கூறும் நிலைமைக்கு நாம் உள்ளாகியிருக்கிறோமே... இந்த நிலைமைக்கு யார் காரணம்?

தலைமைவெறி, அதிகாரவெறி, கொலைவெறி, பணவெறி, புகழ்வெறி ஆகிய இலட்சியங்களைக் கொண்ட பிரபாகரன் கும்பலானது—

தமிழ்மக்களின் நிலைமை குறித்தோ, எதிர்காலத்தைப் பற்றியோ கொஞ்சம்கூடக் கவலைப்படுவதாகவோ, அக்கறைப்படுவதாகவோ இல்லை.

இந்தக்கும்பல் முதலில் தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒற்றுமையைச் சீர்குலைத்தார்கள்.

பின்னர், தம்மை மட்டும் தனிப்பிரதிநிதியாக அங்கீகரிக்கும்படி இந்திய அரசிடம் பின் கதவால் பிச்சைகேட்டுத் திரிந்தது மட்டுமல்லாது அதற்கு ஈடாக ஈழப் போராட்டத்தை விலைபேசி விற்றார்கள்.

ஈழமும் வேண்டாம் போராட்டமும் வேண்டாம் எம்மை நிம்மதியாக வாழவிட்டால் போதும் என மக்கள் முடிவுக்கு வந்துநின்ற வேளையில்...

அதையும் விட்டார்களா... எவன் எவனோடு போனாலென்ன பூசாரிக்குக் காப்பணம் என்பதாக தமது கொள்ளைக்கார அதிகாரத்தை துப்பாக்கிமுனையில் மீண்டும் நிலைநாட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லையாம் என்ற கணக்கில்—மக்களைச் சந்திப்பதற்குத் துணிவற்றவர்கள்;

மக்களின் தீர்ப்பை நேர்மையோடு ஏற்றுக் கொள்வதற்குத் திராணியற்றவர்கள்;

படிப்பகம்

www.padippakam.com



மக்களைத் துப்பாக்கி முனையில் அடக்கியாண்டு பழக்கப் பட்டுப் போனவர்களுக்கு ஜனநாயகத்தையும் சமாதானத்தை யும் ஜீரணிக்க முடியாமற் போனது.

ஜனநாயக சமாதான சக்திகளைப் புறக்கணித்து விட்டுப் புலிவாலைப் பிடித்துக் கொண்டு வெற்றி உலா வந்த இந் தியா —

அதே புலி கடிக்கத் தொடங்கியவுடன் வாலைப் பிடித்துக் கொண்டிருக்கவும் முடியாமல் விடவும் முடியாமல் ததிங்கிணத் தோம் போட்டுக்கொண்டிருக்கின்றது.

**பாசமிகு தமிழ் மக்களே!**

'தானா எல்லாம் மாறும் என்று சகித்திருப்போம்' என்று இல்லாமல், எம் அனைவருக்கும் எது தேவையோ,

அவற்றை நிலைநாட்டும் மாற்றத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதியோடு செயற்படுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



இன்று யாழ் குடா நாட்டில் நடைபெறும் கொள்ளைகள் யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்று வெளிப்படையாகத் தெரிகின்றபோதிலும் —

அந்தப் பகிரங்கமான செய்திகளை, 'இனந்தெரியாத நபர்களால் நாலு இளைஞர்கள் சுடப்பட்டார்கள்...... இனந் தெரியாதவர்கள் கொள்ளையடித்தார்கள்' என்றே போடுகி றார்கள்.

இந்தத் தொடைநடுங்கிகளின் இந்தவகையான 'பத்திரிகா தர்மமும்' 'கருத்துச் சுதந்திரமும்' எவ்வளவு தூரம் மக்கள் விரோத சக்திகளுக்குச் சேவை செய்கின்றது என்று சிந்தித்துப் பாருங்கள்.

**சண்டித்தனத்துக்குப் பயந்து சத்தியத்தை ஒளிப்பவர்கள்**

'திறீ ஸ்டார்' என்று ஒரு அமைப்போ கூட்டு முன்னணி யோ உண்மையில் எங்கும் இல்லை என்பது இந்தப் பத்திரிகை யாளர்களுக்கு நன்கு தெரியும்.

ஆனாலும், புலிகளை விசுவாசிப்பதன் மூலம் தாங்கள் மட்டும் தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம் என்பதற்காக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீது சேற்றையள்ளி வாரியிறைப்பதில் கூச்சநாச்சமின்றிச் செயற்படுகின்றார்கள்

இதேபோலத்தான் வதந்திகளைப் பரப்புபவர்களும் தமது 'கருத்துச் சுதந்திரத்தை'ப் பயன்படுத்துகிறார்கள்.

புலிகளைப் பற்றிய உண்மையான செய்திகளைப் பற்றிக் கருத்துச் சொல்லுவதற்கு அஞ்சுகிற கோழைகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பற்றி எந்தவித வதந்தி களையும் தயங்காமல் பரப்பிவிடுகின்றார்கள்.

காரணம்—

புலிகளைப் பற்றி விமர்சித்தால் பச்சைமட்டையடி, துப் பாக்கிச்சூடு.

இந்தப் பாசிசக் கொடூரத்துக்கு எதிராக வாயைத் திறக் கக்கூடத் தயாராக இல்லாதவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணிக்கு எதிராக சேற்றையள்ளி வாரி வீசுவதில் தயக்கமின்றிச் செயற்படுகின்றார்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்காரர்கள் கருத்து முரண்பாடுகளுக்காகத் துப்பாக்கிகளைத் தூக்கமாட் டார்கள் என்பதனால் இங்கு 'கருத்துச் சுதந்திரம்' கண்மண் தெரியாமல் செயற்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், ஒன்றை மட்டும் கூறவிரும்புகின்றோம்: யானை தன் தலைமேல் மண்ணை வாரி அள்ளிக் கொட்டுவதுபோல் தமிழ் பேசும் மக்கள் செயற்படக் கூடாது என்பதைத்தான் மீண்டும் மீண்டும் கூற விழைகிறோம்.

சரியான சக்திகளை இனங்கண்டு செயற்படுவது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட தவறான போக்கு, சாதாரண பாமர மக்களிடம்தான் இருக்கின்றது என்று கூறிவிடமுடியாது.

தங்களை முற்போக்கு இடதுசாரி ஜனநாயக சக்திகள் என்று கூறுவோரிடமே அதிகமாகக் காணப்படுகின்றது.

சரியான ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரி, புரட்சிகர சக்திகள் முதலில் கண்திறக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை.

## மக்களை, போராட்டத்தை பேரம்பேசி விலைக்கு விற்கிற தேசபக்தர்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி—

ஏன் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது;

ஆயுதங்களைக் கீழே வைத்தது;

இந்தியப் படைகளோடு ஒத்துழைத்தது;

அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொண்டது...

என்கின்ற விடயங்களை மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும், ஆழமாகவும் சிந்தித்துப் புரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் பேசும் மக்களின் உரிமையை எந்த சக்திகளோடும் பணத்துக்காகவோ பதவிக்காகவோ பேரம் பேசியதுமில்லை — பேரம் பேசப்போவதுமில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கொலைகாரர்களோடு சமரசம் செய்து கொள்வது இல்லை. அனைவரினதும் ஜனநாயக உரிமைகளுக்காக எப்போதும் எந்த இழப்புகளின் மத்தியிலும் உறுதியோடு போராடி வந்திருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய முதலாளித்துவத்தினதும், அதன் அரசினதும், அதில் இப்போதுள்ள அரசாங்கத்தினதும் தன்மைகளையும் பண்புகளையும் அவற்றின் வரைமுறைகளையும். தெளிவாகவே புரிந்துகொண்டுதான் செயற்பட்டு வருகிறோம்.

**எமதன்புக்குரிய தமிழ் மக்களே!**

இந்திய முதலாளித்துவ அரசின் அதிகாரிகளுக்கு கள்ளக் கடிதம் எழுதும் குள்ள நரி வேலைகளைச் செய்த 'தேசபக்தர்கள்' அல்ல நாங்கள்......

அமெரிக்க அரசின் உளவுத் துறையோடு கூடிக்குலாவும் பெரிய தமிழ்ப் பிரமுகர்களிடமிருந்து பணம் வாங்குவதற்காக சிங்கள மக்களைக் கொலை செய்தவர்கள் அல்ல நாங்கள்.

இந்திய அரச அதிகாரிகளிடம் (அதில் 3.8 கோடி ஈந்த எம்.ஜி ஆரும் உள்ளடக்கம்) 100 கோடி ரூபாவுக்கோ அல்லது ஒரு கோடி ரூபாவுக்கோ பேரம் பேசி, தமிழ் மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தைச் சந்தைப் பொருளாக மாற்றியவர்கள் அல்ல நாங்கள்.

ஏனைய இயக்கங்களுக்கு 'சமூக விரோதிகள்' பட்டத்தைச் சூட்டி விட்டு, உத்தம புத்திரர்கள்போல் நாடகமாடி நள்ளிரவில் முகமூடியணிந்து திறீஸ்டாரின் பெயரில் தமிழ்த் தாய்மாரின் தாலிக் கொடிகளை துப்பாக்கி முனையில் பறித்தெடுத்தவர்கள் அல்ல நாங்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காகவும், புரட்சிகர சமுதாய மாற்றத்துக்காகவும் புறப்பட்டவர்கள்...... அதற்காக உழைப்பவர்கள்...... அதையே இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்தும் செயற்படுபவர்கள்—

அந்த நீண்ட கால நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் நாம், அந்த நீண்டகால தேவைகளுக்காகவே இப்போது சமாதானம், ஜனநாயகம், ஒற்றுமை தேவை என்று வலியுறுத்துகிறோம்.

இதைப் புரிந்து கொள்ளாத சிலர் எம்மைப் பற்றி மிகவும் பாமரத்தனமாகச் சிந்திக்கின்றார்கள்.

மறு பக்கம் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கும், இடதுசாரி அதி தீவிரவாதிகளுக்கும் எமது நிலைப்பாடுகளும் நடைமுறைகளும் ஜீரணிக்கப்பட முடியாதவையாக இருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் பின்னால் போகவோ அல்லது இடதுசாரி அதிதீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தவோ நாம் தயாராக இல்லை.

மாறாக, எமது மக்களின் நீண்டகால நலன்களை அடையும் வகையில் நாம் எவ்வளவு நிதானமாயும் உறுதியாயும் செயற்படுவது என்பதுவும்,

அதற்கேற்ற வகையில் இன்று நாம் எவ்வகையான அரசியல் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் கடைப்பிடிப்பது என்பதுவுமே எம்முன்னாலுள்ள கேள்விகளாகும்.

சர்வதேச அனுபவங்களையும், எமது நாட்டின் வரலாற்று அனுபவங்களையும் பாடமாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடைகண்டு நாம் செயற்பட்டு வருகிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இன்றைய அரசியலை அனைவரும் எதிர்காலத்தில் புரிந்து கொள்வர் என்ற தன்னம்பிக்கையோடும் உறுதியோடும் தொடர்ந்து செயற்படுவோம்!



படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்

1988 ஆனி 15

எமதினிய தமிழ் மக்களே !

இன்றைக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார்?

தமிழ் மக்களின் தலைவர்கள் யார்?

தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் யார்?

என்ற கேள்விகளை உங்கள் மத்தியில் எழுப்புகின்றபோது, பலரிடமிருந்து வருகின்ற பதில் :

'இயக்கங்களும் வேண்டாம்,

இந்தியப் படைகளும் வேண்டாம்,

சிறீலங்கா அரசும் வேண்டாம்,

எங்களை விட்டால் போதும்' என்பதாகவே உள்ளது.

இதுவரை காலமும் இடம்பெற்ற சம்பவங்களின் தொகுப்புக்களால் விளைந்த வெறுப்பு, ஆத்திரம், விரக்தி என்பன வற்றின் விளிம்புகளிலிருந்தே அந்தப் பதில்கள் பிறக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வது அரசியலை ஆழமாகப் புரிந்தோரின் கடமையாக உள்ளது.

அமைதியான ஒரு நிலையை நீங்கள் வேண்டுகிறீர்கள் என்பதையும்,

ஆயுதங்கள் தெருக்களில் கொலைபுரிந்து திரிவதை நீங்கள் வெறுக்கின்றீர்கள் என்பதையும்,

'தமிழீழத் தாயகம் எமது தாகம்' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டவர்கள் அதிகார வெறியும், கொலைவெறியும், கொள்ளை வெறியும் பிடித்து மக்கள் விரோதிகளாகத் திரிவதைக் கண்டு நீங்கள் ஆத்திரம் கொண்டிருக்கின்றீர்கள் என்பதையுமே உங்கள் எண்ணங்கள் வெளிப்படுத்துகின்றன.

அன்பார்ந்த தமிழ் மக்களே!

அரசே இல்லாத சமூக அமைப்புக்காகத்தான் நாங்கள் போராடுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



எல்லோருக்கும் உற்பத்திக் கருவிகளும் உற்பத்திகளும் சொந்தம், ஆளுவோர் - ஆளப்படுவோர் என்ற வர்க்கங்களற்ற ஒரு வரலாற்றுக் கட்டத்திற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராடுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் அதேவேளை ஒரு விடயத்தை இத்தச் சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

அது என்னவெனில், அரசும் அதிகாரமும் அதன் நிர்வாகமும் உதிர்ந்துபோன பொதுவுடமைச் சமுதாயம் ‌என்பது அராஜகத்தின் இருப்பிடமல்ல என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறீலங்கா அரசின் ஆயுதப் படைகளும், பொலிஸ் நிர்வாகமும் கடந்த காலத்தில் — ஏன், இன்றும் கூட — மேற்கொண்ட அடாவடித் தனங்கள், அடக்குமுறைகள், ஆயுதக் கொடூரங்கள் என்பவற்றின் காரணமாக அவற்றின்மீது வெறுப்புக் கொண்டோம்— இன்றும் வெறுக்கின்றோம் என்பதனால், அதற்குப் பதிலாக ஆயுதந்தாங்கிய தமிழ் இளைஞர் குழுக்கள் தாம் நினைத்தபடி கொலை செய்வதையும், கொள்ளையடித்துத் திரிவதையும், ஆயுத மிரட்டல் மூலம் அதிகாரம் நடத்த முற்படுவதையும் நீங்கள் வரவேற்கமுடியாது — வரவேற்கவும் கூடாது.

புரட்சி என்பது கொலை வெறி கொள்ளை வெறி அல்ல; சோஷலிசம் என்பது எவரும் ஆயுதந் தாங்கித் திரியும் அராஜகம் அல்ல.

இன்றைக்கு இருக்கின்ற முதலாளித்துவ அரசுக்கெதிராகப் போராடுகின்றோம் என்பது சோஷலிச அரசை நிறுவுவதற்காகவே தவிர, அராஜகத்தை உருவாக்குவதற்காக அல்ல.

ஆயுத வெறி பிடித்த அராஜகக்குழுக்களை முதலாளித்துவ அரசுக்கு மாற்றீடாகக் கொள்ள முடியாது.

முதலாளித்துவ அரசு இன்றைய சமுதாய வளர்ச்சியில் பிற்போக்கானது என்பதனால், பாசிச வெறி பிடித்து அலையும் ஆயுதக் குழுக்கள் முற்போக்கானவையாக ஆகிவிட முடியாது.

சிறீலங்கா அரசு முதலாளித்துவ அரசு, இந்திய அரசும் முதலாளித்துவ அரசு. இந்த அரசுகளின் படைகளின் மனித உரிமை மீறல்களை —

மக்களால் தட்டிக் கேட்க முடிந்தது;

படிப்பகம்

www.padippakam.com



அவற்றிற்கெதிராக மக்கள் வீதிக்கு வந்து போராடமுடிந்தது;

நீதிகேட்டுக் குரலெழுப்ப முடிந்தது;

உண்ணாவிரதம் நடத்த முடிந்தது;

ஊர்வலம் நடத்த முடிந்தது.

ஆனால் —

'தமிழ் மக்களின் பாதுகாவலர்' தாமே என்று கூறிக் கொள்ளும் புலிகளினால் இதுவரை,

3000க்கு மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்,

உயிரோடு எரிக்கப்பட்டிருக்கிறார்கள்,

துண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்,

பல ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் புலிகளின் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்,

வெலிக்கடைப் படுகொலையைவிட மோசமான வீட்டுப் படுகொலையினையும் புலிகள் யாழ்ப்பாணத்தில் நடத்தி முடித்தார்கள்......

ஆனால், எந்தத் தமிழ் மகனாலாவது அந்த மனித உரிமை மீறல்கள் தட்டிக் கேட்கப்பட்டதா?

அதற்கெதிராக வீதிக்கு வந்து போராட முடிந்ததா?

ஏன் முடியவில்லை......?

புலிகளின் கொலைவெறியின் முன்னால் மக்கள் நடுநடுங்கி மௌனித்துப் போயிருந்தார்கள் என்பதுதானே உண்மை.

சாதாரண மக்கள் மட்டுமல்ல, சமுதாயத்தின் புதிய தலைமுறையை உருவாக்கும் ஆசிரியர்கள்,

தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற்சங்கவாதிகள்,

முற்போக்கான சிந்தனை கொண்டவர்கள்,

ஜனநாயகத்தை நேசிப்பவர்கள்,

மனிதாபிமானம் உடையவர்கள்......

அனைவருமே புலிகளின் கோரத் தாண்டவத்தின் முன்

படிப்பகம்

www.padippakam.com



னால் மனதுக்குள் கூட முணுமுணுப்பதற்கு அச்சம் கொண்டு, பெட்டைப் புலம்பல் கூட இன்றி நெட்ட நெடு மரங்களாய் விறைத்து நின்றார்கள்.

**எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!**

பாசிச வெறியின் முன்னால் முதலாளித்துவம்கூட ஜீரணிக்கப்படலாம் மன்னிக்கப்படலாம் என்பதுதான் இரண்டாம் உலக மகாயுத்தம் மனித இனத்துக்குத் தந்துள்ள வரலாற்றுப் பாடம்.

ஜெர்மானிய வெறியைப் பயன்படுத்தி பிணங்களின்மீது உலகை ஆள முற்பட்ட ஹிட்லரிசம் இன்னும் செத்துப்போய் விடவில்லை.

உலகம் முழுவதும் அந்தந்த இனங்களின் உணர்வுகளை வெறிகளாக்கி, அதில் நீந்தி அதிகார ஓடத்தில் ஏறிவிடுவதற்கு ஹிட்லரின் மானசீக சீடர்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

அதில் ஒரு பாத்திரமாகவேதான் இங்கே பிரபாகரன் கும்பல்.

இந்தக் கும்பல் எதற்காகப் போராடுகின்றது; யாருக்காக இந்தியப் படையுடன் சண்டை பிடிக்கின்றது......

தனது கொலை வெறியை மறைப்பதற்குத் தமிழ் வெறியைப் போர்வையாக்கிக் கொள்கின்றது.

இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும் என்பதற்காகவா போராடுகின்றார்கள்?

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்காகவும் தன்னாதிக்கத்திற்காகவுமா இந்தியப்படைகளுடன் சண்டை பிடிக்கின்றார்கள்?...

இல்லை... இல்லை... இல்லவேஇல்லை. இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறக் கூடாதாம். தமிழ் மக்கள்மீது புலிகள் அதிகாரம் செலுத்தும் வகையில் இந்தியப் படைகள் புலிகளுக்கு சிறீலங்கா அரசின் படைகளிடமிருந்து பாதுகாப்புத் தரவேண்டுமாம்.

ஆஹா, எவ்வளவு நல்ல தேசப்பற்று... முற்போக்கு... தியாகத்தனம்.

இந்தியாவானது புலிகளுக்கு 100 கோடி ரூபா பணத்தையும் தந்து, தமிழ் மக்கள்மீது கொலை வெறியாட்சி நடத்துவதற்குப் பாதுகாப்பும் தந்தால்—

படிப்பகம்

www.padippakam.com



இந்தியப் படைகள் உடனே... அடுத்தகணநேரமே நட்புப் படைகளாகிவிடும்; இந்திய அரசு முற்போக்கான புரட்சிகர அரசாகிவிடும்; இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி திருவாளர் பிரபாகரனின் நேசமும் பாசமும் மிக்க நட்புத் தலைவராகி விடுவார்......

அப்படியில்லாவிட்டால்—

இந்தியப் படைகள் ஆக்கிரமிப்புப் படைகள்; இந்திய அரசு பிற்போக்கான முதலாளித்துவ அரசு; ராஜீவ் காந்தி தமிழர்களின் மாபெரும் எதிரி......

ஆஹா, புலிகளின் போராட்டத் தத்துவமே தத்துவம்!

**இனிய தமிழ் மக்களே!**

உங்களுக்கு இவை எதுவும் புரியாமல் இருக்கின்றன என்று நாங்கள் சொல்வதற்கில்லை. ஆனால், உங்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக உள்ள புரிதல்களுக்கு ஒரு கூட்டு வடிவம் தேவைப்படுகின்றது.

மக்கள் மத்தியில் நிலவும் பல்வேறுபட்ட கருத்துக்களும் அபிப்பிராயங்களும் சுதந்திரமாக வெளிவர வேண்டுமென்பதே எங்களின் விருப்பம்.

மக்கள் தங்கள் விருப்பத்தையும் முடிவுகளையும் சுதந்திரமாகவும் உறுதியாகவும் தெரிவிப்பதற்கான நிலைமையை உருவாக்குவதையே நாம் இப்போது கடமையாகக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகள் யார்? தமிழ்மக்களின் தலைவர்கள் யார்? தமிழ்மக்களின் பாதுகாவலர்கள் யார்? என்பதைத் தீர்மானிக்கும் உரிமையும் கடமையும் தமிழ் மக்களுக்கு மட்டுமே உரியது.

அதனை இந்திய அரசோ, சிறீலங்கா அரசோ, எந்தவொரு குழுவோ தீர்மானிக்க முடியாது.

மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது, தனிநாடாகப் பிரிந்து வாழ்வதா அல்லது மற்ற தேச மக்களோடு சேர்ந்து வாழ்வதா என்பதைத் தீர்மானிப்பது மட்டுமல்ல. மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது அவர்களின் அதிகாரம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விடயத்திலும் அவ் உரிமை உண்டு. அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும் — அதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. அதை நிலைநாட்டுவதற்காக ஈழ

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதை இழந்தும் போராடும் என்பதை உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

நாம், எம்மீது என்ன வசைமாரியை யார் பொழிகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

எம்மை அமுக்கி மறைத்துவிடும் நோக்கோடு சேற்றை வாரியிறைத்துக் கொண்டிருப்பவர்கள், தாங்கள்தான் அமுங்கி அழிந்துபோகும் ஆபத்தோடு சேற்றினுள்ளிருப்பதைப் புரிந்து கொள்ள மறுப்பதால், அதை எப்போதும் சொல்லிக் காட்டிக் கொண்டிருக்கவும் நாம் விருப்பப்படவில்லை.

எமது மக்களுக்காக நாம் என்ன செய்கின்றோம் என்பது எமக்குப் போதுமானது. ஏனெனில் நாம், வரலாற்றின்மீது நம்பிக்கையுள்ளவர்கள்.

பாசமிகு தமிழ் மக்களே!

கொலைகாரர்களும் கொள்ளைக்காரர்களும் காட்டாட்சி நடத்தும் இன்றைய நிலைக்கு நீங்கள் ஒரு முடிவுகட்ட வேண்டும்.

இன்றைக்கு எமது சமுதாயத்தின் ஒரு தலைமுறை அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மக்களின் சொத்துக்கள் ஆயுதம் தாங்கிய வெறியர்களால் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதிகார வெறிபிடித்தவர்கள் அமைதியொன்று ஏற்படவிடாமல் — ஜனநாயகச் சூழல் ஒன்று உருவாகவிடாமல் நாசகார யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்...இதற்காக இளம் சிறுவர்களைக் கடத்திச் சென்று பயன்படுத்துகிறார்கள்......

இதற்கு ஒரு இறுதி முடிவு கட்டுவதென்ற உறுதியோடு செயற்படாவிட்டால் இந்தக் கொலைக்களச் சூழ்நிலையும், அதிகாரமோக ஆர்ப்பாட்டங்களும், 'சூனியமாய்த் தெரியும் எதிர்காலம்' என்ற நிலையும் எம்மிடமிருந்து விடைபெறப் போவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்

**1988 ஆடி 01.**

**எமதினிய தமிழ் மக்களே!**

இப்போது புரிகின்றதா இந்தப் புலிகள் எதற்காக இந்தியப் படைகளோடு சண்டையைத் தொடங்கினார்கள் என்பது?

மக்களின் உயிர்ப்பலிகளையும் உடமை இழப்புக்களையும் பகடைக் காய்களாக்கி,

இந்திய அரசிடம் கோடிக்கணக்கான பணத்தையும், கொலைவெறியாட்சியைத் தங்குதடையின்றி நடத்துவதற்கான அனுமதியினையும் பெறுவதற்காகவே இவர்கள் சண்டைபிடித்தார்கள் என்பது இப்போது அம்பலமாகிவிட்டது.

இந்தப் புலிகள் கூட்டம் தமிழ் மக்களுக்குச் செய்துள்ள இனத்துரோகம் இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல.

இவர்களின் துரோகத்திற்கு ஒரு தொடர்ச்சியான வரலாறே உண்டு.

இவர்களின் துரோகத்தனங்களை முகத்திரை கிழித்து முழுமையாகக் காட்டுவதாயின் ஒரு நீண்ட பட்டியல் தேவைப்படும்.

புலிகளின் துரோகம் தமிழ் மக்களுக்குத் தெரியாததுமல்ல — புரியாததுமல்ல.

கெட்டிக்காரனின் புளுகுகூட எட்டு நாளைக்குத்தான். இவர்களின் புனிதப் புளுகுகள் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்?

இந்த அயோக்கியர்கள் தமது பணவெறியையும் பதவி வெறியையும் தீர்த்துக்கொள்வதற்காக, நண்பர்களாக வந்த இந்தியப் படையினரை எதிரிகளாக மாத்திப் பல நூற்றுக் கணக்கான மக்களைப் பலிக்கடாவாக்கினார்கள்;

மீளமைக்க முடியாத அளவுக்கு எமது மக்களின் உடமைகளைச் சீரழிவுக்கு உள்ளாக்கினார்கள்.

இந்தியப் படையினரோடு தாங்கள் தொடங்கிய யுத்தத்துக்கு இந்தப் புலிகள் கொடுத்த பெயர்கள் —

'தேசபக்த யுத்தம்'

படிப்பகம்

www.padippakam.com



'தமிழீழ விடுதலைக்கான யுத்தம்'

'தமிழினத்தின் சுதந்திரத்துக்கான யுத்தம்'

என்பனவாகும்.

இதை உண்மையிலேயே நம்பி மாண்ட புலிகளின் சிற்றிளம் உறுப்பினர்களுக்காக மனப்பூர்வமாக நாம் கவலைப்படுகிறோம்.

ஆனால், பிரபாகரன் - மாத்தயா கும்பல் தமது துரோகத்தனத்தைப்பற்றி மிகத் தெளிவாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை இப்போது அனைவராலும் கண்டுகொள்ள முடிகின்றது.

பிரபாகரன் - பாலசிங்கம் கும்பலுக்கு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு சூதாட்டம்.

இந்திய முதலாளித்துவ அரசிடம் எத்தனை தடவைகள் எமது விடுதலைப் போராட்டத்தைச் சந்தைப் பொருளாக்கி-பேரம்பேசி கோடிக்கணக்கான பணத்தைக் குவித்துக் கொண்டார்கள் என்பது இன்று உலகறிந்த உண்மை.

**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

கடந்த காலத்தில் பாராளுமன்ற அரசியல்வாதிகள், தமிழ் மக்களை மேடைப்பேச்சால் மட்டும்தான் ஏமாற்றினார்கள், அவர்கள் வெறுமனே பாராளுமன்றப் பதவிகளை மட்டும்தான் பெற்றுக்கொண்டார்கள்.

ஆனால் —

இந்தப் புலிகள் கும்பலோ கொலை செய்வதை வியாபாரமாக்கிக் கொண்டார்கள்.

இவர்களால் கொல்லப்பட்ட ஆசிரியர்கள், அரசாங்க அதிபர்கள், கல்விமான்கள், அப்பாவிகள் எத்தனை பேர்......

எமது சமுதாயத்தின் ஆணிவேர்களான இளைஞர்கள் எத்தனைபேரை இவர்கள் கொன்றுகுவித்தார்கள்......

தமது பாசிச தலைமையை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இவர்கள் பலநூற்றுக்கணக்கான தமது உறுப்பினர்களையே முகவரி தெரியாமல் மண்ணோடு மண்ணாக்கி விட்டிருக்கிறார்கள்......

தாம் மட்டுமே தனிக்காட்டு ராஜாக்களாக ஊர்வலம் வர வேண்டும் என்ற வெறியால் —

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டங்களில் கவனம் செலுத்தி வந்த இயக்கங்களை, இவர்கள் தமது ஆயுத பலத்தினால் சிரழித்து, சிறீலங்கா அரசுக்கு உதவி புரிந்தது எத்தனை தடவைகள்......

ஜே.ஆர். அரசாங்கம் மக்களுக்குத் திருப்தி தராத மாகாணசபைச் சட்டமூலத்தை எந்தவித எதிர்ப்புமின்றிப் பாராளுமன்றத்தில் சட்டமாக்கிக் கொள்வதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் இந்தப் புலிகள் அல்லவா......

இன்றைக்கும் சிறீலங்காவின் சிறைகளில் இருக்கும் எமது இளைஞர்களை, சிறீலங்கா அரசாங்கம் விடுதலை செய்யாமல் சாக்குப்போக்குகளைச் சொல்வதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர்கள் புலிகள் அல்லவா......

தமிழ்மக்களைக் கொலை செய்கின்றபோது புலிகள் வழங்கும் பட்டம் — 'சமூக விரோதிகள்',

அல்லது 'காட்டிக் கொடுப்பவர்கள்';

முஸ்லிம் மக்களைக் கொலை செய்கின்றபோது அவர்களுக்கு வழங்கப்படும் பட்டம் — 'ஜிஹாத்';

சிங்கள மக்களைக் கொலை செய்கிறபோது அதற்குச் சொல்லப்படும் காரணம் — சிங்களவர் தமிழ்ப் பகுதிகளில் குடியேற முற்பட்டார்கள் என்பதே.

ஆனால், உண்மை தெரியுமா?

புலிகள், தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய இலங்கை அரசுகள் முன்வரவில்லையென்றால் —

தங்களால் அப்பாவி மக்களைக் கொலை செய்து குவிக்க முடியும் என்பதையே புலிகள் நிரூபிக்க முற்படுகின்றார்கள்.

நிராயுதபாணியான மக்களை, இளைஞர்களைக் கொலை செய்து தமது பதவி - பணப் பேர வியாபாரத்தை நடத்திக் கொள்ளவே முற்படுகின்றார்கள்.

எம்மன்புக்குரிய தமிழ் மக்களே!

எது தேசபக்தி?

எது தேசத் துரோகம்?

என்பதை வேறுபடுத்திப் புரிந்து கொள்ளுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



களவெடுத்தவனே எல்லோரையும்விட முன்னதாகக் "கள்ளன் - கள்ளன்" என்று கத்திக் கொண்டு தப்பி ஓடுவதைப் போல இங்கு துரோகிகளே தியாகிகள்போல் வேஷம் போடுகிறார்கள்.

உணர்ச்சிமிக்க அப்பாவி இளைஞர்களுக்கு கட்டுப்பாடு என்ற பெயரில் நஞ்சு கொடுத்துக் கொலை செய்தவர்கள் —

பல நூற்றுக் கணக்கான இளைஞர்களைத் தேவையற்ற யுத்தக் களங்களில் பலிக்கடாவாக்கியவர்கள் —

இந்தியப் படையுடனான தங்களின் சண்டையின்போது, மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் இழப்புக்களையும் அனுபவித்தபோது,

போராட்டம் என்றால் மக்கள் இறப்பதும் துன்பப்படுவதும் இயற்கைதானே என்று வக்கிரமான போராட்டத் தத்துவம் பேசியவர்கள்......

இன்று —

எதற்காக இதுநாள்வரை சண்டைபிடித்தார்கள் என்பது இப்போது மெள்ள மெள்ள அம்பலத்துக்கு வந்துவிட்டது;

தேசபக்தி வேஷம் கலைக்கப்பட்டிருக்கிறது;

துரோகத்தின் முகத்திரை கிழிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் வியாபாரம் நல்ல விலை போகின்றது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், மாண்டுபோன மக்களுக்கு கணக்கு என்ன?

அழிக்கப்பட்டுப்போன சொத்துக்களுக்கு மீட்சி என்ன?

அங்கவீனர்களாகிப் போனவர்களுக்கு வாழ்வு என்ன?

புலிகளை நோக்கி இந்தக் கேள்விகளை எழுப்புங்கள்.

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்பதுபோல இன்று துப்பாக்கி பிடித்தவனெல்லாம் நீதிபதியாகிவிட்டான்.

தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்தான்.

மக்கள் கண்நேரம்கூட விழிப்பாயிருக்காவிட்டால் —

அவர்களின் கடைசித் துண்டு ஜனநாயகத்தையும் களவாடிக்கொண்டுபோக ஆயிரம் கழுகுகள் காத்துநிற்கின்றன.

மக்கள் தங்கள் உரிமைகளையும் எதிர்காலத்தையும்பற்றி தெளிவாக இல்லாவிட்டால் —

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் பேரில் எந்த அயோக்கியனும் வியாபாரம் நடத்துவான்.

எனவேதான் நாங்கள் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம்:

மக்களே! நீங்கள் விழிப்பாயிருங்கள்!

உங்கள் பேரால் உங்களைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களில் தெளிவாயிருங்கள்!

ஆத்திரமும் அவசரமும் வாழ்வைத் தராது.

அலட்சியமும் அஜாக்கிரதையும் உள்ளதையும் மற்றவர்கள் கொள்ளை கொண்டுபோக வழிவகுக்கும்.

○ தமிழ் மக்களினதும் இயக்கங்களினதும் ஒற்றுமையைச் சீர்குலைத்து; தமிழ் இயக்கங்களுக்கிடையில் இரத்த ஆறை ஓடவைத்த துரோகிகளை,

○ இந்தியா தங்களை மட்டும் ஆசீர்வதிக்க வேண்டும், தனி விமானத்தில் பெங்களூர் செல்ல வேண்டும் என்று, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பேரம்பேசி விற்ற அயோக்கியர்களை,

○ தாங்கள் மட்டும் தப்பிக்கொள்ளவேண்டும் என்பதற்காக புலிகளின் பேர வியாபாரத்திற்கு 'ஆமா' போட்டு வாலாட்டிய சந்தர்ப்பவாதிகளை,

○ போராட்டம்தான் தொலைந்து போயிற்று, அமைதியாவது கிடைக்கட்டும் — குறைந்தபட்ச ஜனநாயகமாவது மிஞ்சட்டும் என்றிருந்த வேளையில் அதற்கும் உலைவைத்து, தமிழ் மக்களின் வாழ்வை தமது சுயநலத்துக்காகச் சீரழித்த துன்மார்க்கர்களை,

○ சிறீலங்கா அரசுக்கெதிரான போராட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும், புனரமைப்புகளை மேற்கொள்வதற்குமென உலகம் முழுவதுமிருந்து முன்வந்த பெருந்தொகை உதவிகள் எதுவும் தமிழ் மக்களுக்குக் கிடைக்க முடியாமற் செய்த இன விரோதிகளை,

○ வரிகளாலும், கொள்ளைகளாலும் மக்களைத் தொடர்ந்து துன்பத்திற்கு ஆளாக்கிய சமூக விரோதிகளை.

படிப்பகம்

www.padippakam.com



○ தங்களது சொந்த நோக்கங்களை அடைவதற்காக — சிவில் நிர்வாகங்களைச் சீர்குலைத்து, இளைய தலைமுறையின் கல்வியைச் சீரழித்து, மக்களில் பல்வேறு மட்டத்தவர்களையும் கண்மூடித் தனமாகக் கொலை செய்து திரிந்த மக்கள் விரோதிகளை —

தமிழ் மக்கள் சரியாகவும், தெளிவாகவும் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்.

கொலைவெறி,

கொள்ளைவெறி,

அதிகாரவெறி பிடித்து காட்டுமிராண்டித்தனமாகத் திரிந்தவர்களின் முகத்திரையைக் கிழித்து —

உண்மைகளை அம்பலத்துக்குக் கொண்டுவருவதற்கான நாள் நிச்சயம் வரும் என்ற உறுதியோடும், நம்பிக்கையோடும் நாம் அனைவரும் முன்னோக்கிய பாதையில் நடைபோடுவோம்.

**அறிவார்ந்த தமிழ் மக்களே!**

ஒரு மணித்தியாலத்தில் 17000 பேரைக் கொலைசெய்து 'சாதனை' புரிந்த ஹிட்லருக்கும், அவனது ஆட்களுக்கும் முடிவு என்னவாயிற்று......?

அவர்கள் இந்த உலகத்தைத் துப்பாக்கிகளாலும், வெடிகுண்டுகளாலும் நிரந்தரமாக ஆளலாம் என்றுதான் நினைத்தார்கள்.

ஆனால், முடிவு என்ன?

மக்கள் விழிப்புணர்வு பெற்றுவிட்டால், தறிகெட்ட கொலைவெறியர்களின் ஆட்டமெல்லாம் ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் அடங்கிவிடும் என்பதே வரலாற்று அனுபவம்.

எமக்கது பாடமாகட்டும்!

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்

1988 ஆடி 15

**எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!**

புலிகளுக்கும், இந்தியப் படையினருக்குமிடையிலே நடைபெற்றுவரும் கள்ளன் — பொலிஸ் விளையாட்டு இன்னும் முடிவுற்றதாக இல்லை.

முடிவுறுவதுபோல் விளக்கங்கள் வெளிவருகின்றன. ஆனால். அதற்கான ஆரம்பங்களைக்கூட காணமுடியவில்லை.

ஆனி மாதம் 15 ந் திகதி என்றார்கள்.

பத்திரிகைகளெல்லாம் ஒரே பரபரப்பு!

பிறகு, ஓரிரு நாட்களில் மௌனம்.

மீண்டும் ஆடி 1 ந் திகதி —

மீண்டும் அதே பரபரப்பு!

புலிகளுக்கும், இந்திய உளவுப் படைப்பிரிவான 'றோ' (RAW) வின் அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் முன்னேறிக் கொண்டிருப்பதாக திருவாளர் கிட்டுவின் பத்திரிகைப் பேட்டிகள் தெரிவிக்கின்றன.

இடையில் ஒரு கேள்வி —

இந்த 'றோ' அதிகாரிகளைப் பற்றித்தானே முன்னர் புலிகள் பல கதைகள் கூறினார்கள்!

அவர்கள் இயக்கங்களின் ஒற்றுமையைக் குலைத்ததாகவும் இயக்கங்களுக்கிடையில் மோதலை உருவாக்கியதாகவும் கூறினார்கள்.

இப்போது என்ன நடந்தது?

அதெப்படி, அந்த 'றோ' அதிகாரிகள் புனிதமானவர்கள் ஆகினார்கள்......?

புலிகளுடன் பேசுவதற்காக அந்த அதிகாரிகள் கங்கையில் நீராடினார்களோ......?

அல்லது —

பிரபாகரன் பிரபுவின் ஆசியைக் கிட்டு மாமா அந்த அதிகாரிகளுக்கு வழங்கி பாவ விமோசனமளித்து தமிழ் மக்களின் நண்பர்களாக்கி விட்டாரோ......?

படிப்பகம்

www.padippakam.com



ஆக, இந்த உலகத்தில் பாவமும் புண்ணியமும், சரியும் பிழையும், தியாகமும் துரோகமும் புலிகளைச் சார்ந்துதான் செயற்படுகின்றனவோ......?

இந்தப் பிரபாகரோபதேசத்தை நாங்கள் 'அறியாதவர்களாக' இருந்ததற்காக நெற்றியில் குட்டி இரு கன்னங்களிலும் தப்பு தப்பு என மூன்று முறை சாத்திக் கொள்வோமாக!

அது ஒருபுறமிருக்க—

இப்போது இந்தியாவின் பிரச்சினை எப்படியாவது ஒரு தேர்தலை மிக விரைவாக நடத்தி முடித்துவிடவேண்டும் என்பது.

தமிழ் நாட்டுத் தேர்தல் என்னும் கண்ணாடிக்குள்ளால் தான் இந்தியா இங்குள்ள விடயங்களைப் பார்க்கிறது.

இதன் காரணமாகப் புலிகளுக்கு எவ்வளவு பணத்தையென்றாலும் கொடுக்கத் தயாராக விலை பேசுகின்றது.

புலிகளுக்கும் இந்த வியாபாரம் புதிதல்ல. பல தடவைகள் செய்த வியாபாரம்தானே!

ஆகையினால், அனுபவம் மிக்கவர்கள் தமது பகிரங்க விலையை 50 கோடியளவில் உயர்த்தியிருக்கிறார்கள். அதே வேளை, கள்ள நோட்டாக 10 கோடியைக் கோரியிருக்கிறார்கள். — பேரம் சுமுகமாகப் போகின்றது.

ஆனால் —

எதிர்பார்க்கப்படும் முடிவுகளும் விளைவுகளும் ஏற்படுமா என்பதுதான் இருபகுதியினருக்கும் இன்னும் உறுதியாகாமல் இருக்கிறது.

தமிழ் மக்களின் தலைவிதி! இப்படியான நிலைக்குள் அகப்பட்டு நிற்கவேண்டியிருக்கிறது — அதுவும் விடுதலைப் போராட்டத்தின் பேரில்!

தமிழ் மக்களின் அரசியல் வரலாறு இந்த மாதிரியான நிலைக்கு உள்ளானதற்காக எம்மை நாம் நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஏனென்றால் —

தமிழ் மக்கள் மத்தியில் இன்னும்தான் அது தொடர்பான விழிப்போ, தெளிவோ ஏற்பட்டதாக இல்லை.

ஆனால், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இன்றும் உறுதியாக நம்புகிறது:

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்மக்கள் முட்டாள்களல்ல.

தம்மை வியாபாரப் பொருளாக மாற்றிய துரோகிகளுக்கு உரிய நேரத்தில் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என்று.

அறிவார்ந்த தமிழ் மக்களே!

துரோகத் தனங்களின் வரலாறு தொடரும் நிலையைத் தடுத்து நிறுத்தும் நாளை நோக்கி நாம் அனைவரும் நடைபோட வேண்டும்.

விடுதலை என்னும் பெயரில் மக்களை வியாபாரப் பொருளாக்கும் நிலைமைக்கு முடிவுகட்டும் நிலையை நோக்கி நாம் அனைவரும் தெளிவோடு செயற்படும் நிலையேற்படவேண்டும்.

தமிழ் மக்கள் இங்கு இருதலைக்கொள்ளி நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு உலகத்தின் கண்முன்னால் இந்தியாவுக்கு எதிரானவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியப் படைகள், தமிழ்மக்களை அடக்கி ஆளும் ஆதிக்கப்படைகள் போலக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆனால் —

அதேவேளை, இந்தியப் படைகள் இலங்கையைவிட்டு முற்றாக வெளியேறுவதை தமிழ் மக்கள் விரும்புகிறார்களா என்றால் ...... இல்லை.

திருகோணமலையில் உள்ள தமிழ்மக்கள் கூறுகின்றார்கள்: இந்தியப் படைகள் தங்களின் பாதுகாவலர்கள், இந்தியப் படைகள் வெளியேறினால் தமக்கெதுவித பாதுகாப்பும் இல்லை. எனவே, தாமும இந்திய படைகளோடு சேர்ந்து வெளியேறப்போவதாக திருமலை மக்கள் வெளிநாட்டு நிருபர்களுக்கு கூறுகின்றார்கள்.

மட்டக்களப்புப் பிராந்தியத்திலும் இதுதான் பெருமளவு நிலை.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் அவ்வாறு இன்னும் சொல்லத் தொடங்கவில்லை.

அப்படியானால் —

வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்தவுடன் சிறீலங்கா அரசாங்கமும், சிங்கள பேரினவாதிகளும் இந்தியப் படைகளை வெளியேறும்படி கோரப் போகின்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் நிலை என்ன?

'ஆமாம், இந்தியப் படைகள் வெளியேறத்தான் வேண்டும்' என்று கூறப்போகின்றார்களா?

'இல்லையில்லை, வெளியேற வேண்டாம்' என்று போகும் இந்தியப் படைகளை மறித்து வழிமறிப்புப் போராட்டம் நடத்தப்போகின்றார்களா?

அல்லது —

சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தலையைக் கவிழ்ந்து பிடித்துக்கொண்டு மௌனமாய் இருக்கப் போகின்றார்களா......?

இப்பொழுதே முடிவு செய்து கொள்ளுங்கள்.

அன்பார்ந்த தமிழ் மக்களே!

சிறீலங்கா அரசாங்கம் தனது நோக்கங்களை அடைவதற்குக் கணக்காக புலிகளை வழிப்படுத்திச் செயற்படுத்தியிருக்கின்றது.

புலிகளும் தமிழ் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் தமது வரலாற்றுச் சேவையை ஆற்றி, நல்ல முறையில் சிங்கள பேரினவாதிகளுக்கு மிகச் சிறப்பாகவே துணை செய்திருக்கிறார்கள்.

அல்லது —

50 கோடி வாங்கியவுடன் புலிகளுக்கு இந்தியா நண்பன்!

எனவே, உடனே மாலை மரியாதைகள் தோரண கும்பங்களுடன் மீண்டும் இந்தியப் படைகளுக்கு விருந்துபசாரமா?

நல்ல வெட்கம்கெட்ட சீவியமடா நமது நிலைமை!

புலிகளை நம்பி ஆதரவளிப்பதற்காக இந்தியாவிலிருந்து புறப்பட்ட 'இன்குலாப்' போன்றவர்கள் ஏற்கனவே தலைக்குத் துண்டைப் போட்டுக்கொண்டு ஓடி ஒளிந்துவிட்டார்கள்.

தி.மு.க. தலைவர், இப்போது தமது மேடைப் பேச்சுக்களின் திசையை மாற்றிக் கொண்டுவிட்டார்.

நமது நாட்டில் புலிகளுக்குக் கொடி பிடித்த 'தேசபக்தர்கள்'(?), முன்னர் 'புலிகள் மாபெரும் வீரர்கள்' என்று உரத்துக் குழலூதியவர்கள்......

இப்பொழுது —

'அவன்கள் பாவம்தானே;' என்று அமத்தி வாசிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

படிப்பகம்

எனவே, அவர்களும் மௌனத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முன்னர் புலிகளின் வீரத்தைக் கொட்டை எழுத்தில் போட்ட புலிகளின் ஆதரவுப் பத்திரிகைகள் —

இப்போது புலிகளுக்கும் 'றோ' வுக்குமிடையில் ஒப்பந்தம் என மக்களுக்குச் சொல்வதில் அக்கறை காட்டுகின்றன.

மக்கள் செத்துக் கொண்டிருந்தபோது வீரத்தைக் கூறி அதை மறைக்க முற்பட்டவர்கள் —

இப்போது அது எடுபடாது என்பதனால், 'இந்தியா புலிகளுக்குத் துணைநிற்கும், மீண்டும் புலிகளே அதிகாரிகள்' என்று கூறுவதன் மூலம் புலிகளுக்கு ஆதரவு திரட்டும் தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகின்றனர்.

தமிழ் மக்களின் பெயரில் இங்கு நடத்தப்படுபவை அத்தனையும் வியாபாரங்கள்.

வீரம், தியாகம் என்பதெல்லாம் ஏமாற்று வாக்கியங்களாக்கப் பட்டிருக்கின்றன.

உயிர்கள் இங்கு பேரம் பேசும் பொருட்கள் ஆக்கப்பட்டிருக்கின்றது

ஒப்பந்தங்கள் எல்லாம் வர்த்தக ஒப்பந்தங்களாக மட்டுமே உள்ளன.

எனவே, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் சொல்கிறோம்:

இங்கு இப்போது போராட்டம் என்ற ஒன்று நடைபெறவில்லை.

ஆகவே, எமது மக்கள் அர்த்தமின்றிச் சாவதை ஏற்க நாம் தயாரில்லை.

அமைதி ஏற்படாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் இல்லை.

குறைந்த பட்ச ஜனநாயகம் ஏற்பட்டு, தமிழ் மக்களின் அபிப்பிராயம் சுதந்திரமாக வெளிப்படாமல் இருக்கும்வரை

ஜனநாயகத்திற்கான போராட்டம் ஒன்று தமிழ் மக்களுக்கு உள்ளேதான் நடக்கும்.

இங்கு ஆயுதங்கள் முற்றாகப் பறிக்கப்படாமல் ஓர் ஆரோக்கியமான சூழல் ஏற்படாது.

www.padippakam.com



எவ்வளவுக்கெவ்வளவு இப்போது நிலவும் அராஜகமும், ஆயுத வெறியும் தொடர்கிறதோ—

அவ்வளவுக்கவ்வளவு சரியானதொரு போராட்டம் எழுச்சி பெறுவதற்கான காலமும் பின்தள்ளும்.

இன்றைக்கு ஆயுதந் தூக்கித் திரியும் புலிகளையோ கொள்ளையடித்துத் திரியும் சதிகாரக் கும்பல்களையோ—

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் இயக்கங்கள் என்று யாராவது நம்பினால்,

அவர்களுக்காக நாங்கள் பரிதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

இனிய தமிழ் மக்களே!

இந்தக் கூட்டங்கள் தமிழ் மக்களை விற்றது—அழித்தது போதும் என்று முடிவுகட்டுவோம்.

கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று சொல்லப்படும் நிலைமைக்குச் சமாதி கட்டுவது என முடிவு செய்வோம்.

விடுதலையின் பேரில் நடக்கும் சமூக அட்டூழியங்களை அடக்குவதற்கு வழிகாண்போம்.

புதிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கான அத்திவாரத்தைப் போடுவதற்கு, தேவையான நிலத்தை இப்போது பண்படுத்துவோம்.

எதிர்காலத்தில் ஓர் சரியான போராட்டம் உருவாகுவது என்பது இப்போது நாம் ஏற்படுத்தும் அமைதியிலும் ஜனநாயகத்திலுமே தங்கியுள்ளது.

இந்த சூத்திரத்தின் தாற்பரியத்தைப் புரிந்துகொண்டு செயற்படுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய கண்ணோட்டம்
1988 ஆவணி 01

**அன்பிற்கினிய தமிழ்மக்களே!**

**ஆடிப்படுகொலைகள் நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்கிடையில் பல்லாயிரம் வகையான இலட்சக் கணக்கான சம்பவங்கள் நடந்து முடிந்துவிட்டன.**

**இந்த ஐந்து ஆண்டுகள் ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் ஓர் உணர்ச்சிப் பிரவாகப் போராட்டத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் உள்ளடக்கியிருக்கின்றன.**

**இந்த ஐந்து ஆண்டுச் சம்பவங்கள் பற்றிய தகவல்களும், அவை பற்றிய சரியான மதிப்பீடும் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமாகும்.**

இந்த நூற்றாண்டு முடிவடைவதற்கு இன்னும் 12 ஆண்டுகளே உள்ளன.

எனவே, கடந்து முடிந்த ஐந்து ஆண்டுகள் தமிழ்மக்களின் வரலாற்றில் இந்த நூற்றாண்டுக்கு மட்டுமல்ல அடுத்த நூற்றாண்டுக்கும் அவசியமாகும்.

சுதந்திரமானதொரு ஈழத்தைக் கண்டுவிடலாம் என்ற ஆசையில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களையும், எல்லா வகையான இழப்புக்களையும் தாங்கிக் கொண்டார்கள்.

சுதந்திர வீறுகொண்ட தமிழ் இளைஞர்கள் தியாக சீலர்களாக போராட்டத்தில் குதித்தார்கள் — தமதுயிரைத் துச்சமென மதித்துப் போராடினார்கள்.

உலகம் முழுவதும் இருந்து கிடைத்த அனுதாபமும்,

தமிழ்நாட்டு மக்களினது ஆதரவும்,

இந்தியாவின் உதவியும் —

ஈழ விடுதலைப் போராட்டம் மேலும் மேலும் நம்பிக்கையோடு முன்னேற உதவியாக இருந்தன.

ஈழ விடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்திய சிறீலங்கா அரசு, ஒரு கட்டத்தில் அந்த இயக்கங்களோடு பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது.

படிப்பகம்

www.padippakam.com



ஈழ விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையும் உறுதியும் மேலோங்கியிருந்தமையினால் சிறீலங்கா அரசு பேச்சு வார்த்தை என்னும் போர்வையில் ஏமாற்று நாடகம் ஆடுவது திம்புவில் சாத்தியமாகாமல் மூக்குடைபட்டுப் பின்வாங்கியது.

அவசர அவசரமாக ஏதாவது ஓர் அரசியல் தீர்வைக்கண்டு விடவேண்டும் என்று துடித்த பண்டாரியின் ராஜதந்திரங்களும் இலகுவில் சாத்தியமாகாமல் ஆகின.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் நிலவிய தன்னம்பிக்கையையும் ஒற்றுமையையும் உறுதியையும் குலைத்து,

ஈழ விடுதலைப் போராட்டத்தை நாசமாக்கும் வகையில் புலிகளின் தலைமை அதிகார வெறிபிடித்தாடியது.

புலிகளின் உறுப்பினர்கள் பிழையான முறையில் வழிநடத்தப்பட்டார்கள்.

சிறீலங்கா அரசுப் படைகளுக்கு எதிராக ஒருமுகமாகத் திரண்டு நின்ற சக்திகள் பிளவுபட்டன.

ஆயுதம் ஏந்திய போராளிகள் ஒருவரை ஒருவர் குறி பார்க்கும் நிலை தோன்றியது.

முதலில் 'ரெலோ'

பின்னர் 'புளொட்'

இறுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். என்று யுத்தங்களை புலிகள் தொடுத்து நடத்தியதால் —

போராளிகள் இறந்தார்கள்;

மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்;

தமிழ்நாட்டு மக்கள் வெறுப்புக் கொண்டார்கள்;

உலக அனுதாபம் திசை திரும்பியது.

ஆக மொத்தத்தில், ஈழவிடுதலைப் போராட்டம் சிதைந்து நாசமாகியது.

ஓராண்டுக்கு மேலாக முகாம்களினுள் அடைபட்டுக் கிடந்த சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களிலும், வீதிகளிலும் ஆர்ப்பரிக்கத் தொடங்கியது.

முதலில் ஏனைய இயக்கப் போராளிகளை இயலா நிலைமைக்கு உள்ளாக்கிய புலிகளின் தலைமை, வடமராட்சி அடியோடு தனது போராடும் நிலையை இழந்து வேலணைத்துறைகளிலிருந்து இந்தியாவுக்கு வள்ளம் எடுத்துப் புறப்படத் தயாராக இருந்தவேளையில் —

www.padippakam.com



ஆனால் —

எப்படியாயினும் தமிழ்மக்கள் மத்தியில் தேர்தல் ஒன்றை நடத்துவது—அதற்கான சூழ்நிலையை உருவாக்குவது என்பதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளது.

மக்கள் பெயரில் நடக்கும் கொலைகளை—கொள்ளைகளை நிறுத்தவும்,

மக்கள் பெயரில் பேரவியாபாரம் நடத்துபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும்,

ஒரு தேர்தல் தமிழ்மக்கள் மத்தியில் அவசியமாக உள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஒரு தேர்தல் தேவைப்படுகின்றது என்பது—

சிலருக்கு பதவி வழங்குவதற்காக அல்ல; தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக,

தமிழ் மக்களின் பெயரில் நடக்கும் அநியாயங்களை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக,

தலைமையற்ற தமிழ்ச் சமுதாயம் தங்களுக்சாக யாரை யாவது எதிர்பார்த்திருக்கும் அகதி நிலையை — அநாதைநிலையை மாற்றியமைப்பதற்காக......

இங்கு ஒரு தேர்தல் அவசியமாகி நிற்கின்றது.

ஆடிப்படுகொலைகள் நடந்துமுடிந்து ஐந்து வருடங்கள் நிறைவேறியிருக்கும் இந்த வேளையில்,

இந்திய — இலங்கை சமாதான ஒப்பந்தம் உருவாகி ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் —

எதிர்காலம் பற்றி ஒரு கணம் தெளிவாகச் சிந்திப்போமாக!

படிப்பகம்

www.padippakam.com



# ஈழப்போராளி

1986 வைகாசி ஆனி

**எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!**

'ரெலோ' வுக்கெதிரான யுத்தத்தில் 'ரெலோ' உறுப்பினர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு விட்டார்கள்!

'ரெலோ' முகாம்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு விட்டன!

'ரெலோ' வின் ஆயுதங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன!

'ரெலோ' தலைவர் சிறீசபாரத்தினத்தை வெற்றிகரமாகக் கொன்றொழித்து விட்டோம்!

எஞ்சியுள்ள 'ரெலோ' உறுப்பினர்கள் சரணடைந்து விட்டார்கள்!

'ரெலோ' இயக்கம் முற்றாக அழித்தொழிக்கப்பட்டு விட்டது!

இப்படி அடுக்கடுக்காக அறிக்கைகள்—

வானொலிகளிலும், பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளிவந்ததை அனைவரும் கேட்டிருப்பீர்கள் — பார்த்திருப்பீர்கள்.

இந்த அறிக்கையை—

சந்தோச எக்காளத்துடன், வெற்றிப் பெருமிதத்துடன்,

தங்கள் இலட்சியத்தை அடைந்து விட்டது போன்ற அடங்காத உற்சாகத்துடன் அடுத்தடுத்து வெளியிட்டது—

சிறீலங்கா அரசாங்கமுமல்ல; அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலியுமல்ல.

புலிகளின் வழிகாட்டி, ஆலோசகர்,

உத்தியோகபூர்வமான பேச்சாளர்

சாட்சாத் பாலசிங்கம் அவர்களேதான்;

போராளிகளின் ரத்தத்தில் ஈழத்து வீதிகளை நனைத்ததில் எத்தனை குஷி!

'ரெலோ' இயக்க ஆதரவாளர்களின் வீடுகளையும் வெடி வைத்துத் தகர்த்து,

எரித்துக் கொளுத்தியதில் எவ்வளவு மகிழ்ச்சி!

'ரெலோ' தலைவர் சிறீசபாரத்தினத்தைக் கொலை செய்துவிட்டதாக மீண்டும் மீண்டும் வெற்றிச் சங்கு ஊதுவதில் எத்தனை உற்சாகம்;

எங்களுக்குச் சில சந்தேகங்கள்—

உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்:

படிப்பகம்

www.padippakam.com



ஈழ விடுதலைக்காகத் தம் குடும்பத்தைத் துறந்து,
தம் பெற்றோர், சகோதரர், மனைவி, பிள்ளைகள் பாசங்களைத் தூக்கியெறிந்து, தம் உயிரையும் உடலையும் ஈழத்தின் சுதந்திரத்துக்காக அர்ப்பணித்துப் போராடிய—
ஈழப்போராளிகளைக் கொன்று குவிப்பதில்—
சிறீலங்கா அரசு மட்டும்தான் வெற்றிப் பெருமிதம் கொள்ள முடியும்;
அதற்குத் துணை நிற்பவர்கள் மட்டும்தான் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க முடியும்' அப்படியானால்......
தமிழீழ விடுதலைப் புலிகள் எனத் தமக்கு முத்திரையிட்டுக்கொண்டு திரிபவர்கள் யார்?
சென்னையில் உல்லாசபோகமாக இருந்துகொண்டு ஈழத்துப் போராளிகளின் ரத்தத்தைக் குடிக்கும்படி தனது புலிகளுக்கு உத்தரவிட்ட பிரபாகரன் யார்?
'ரெலோ' இயக்கத்தை முற்றாக அழித்து விட்டதாகப் பத்திரிகை அறிக்கைகளில் வெற்றிச் சங்க நாதம் முழங்குகின்ற புலிகளின் சூத்திரதாரி பாலசிங்கம் யார்?

பாசமிகு தமிழ் மக்களே!

நீங்கள் புலிகளுக்கு அள்ளிக்கொடுத்த பணங்களைக் கணக்குப் பாருங்கள்! உங்கள் கழுத்திலிருந்தும், காதுகளிலிருந்தும் கழற்றிக் கொடுத்த நகைகளை எண்ணிப்பாருங்கள்...
எதற்காகக் கொடுத்தீர்கள்? எதற்காக ஆதரவு அளித்தீர்கள்?
ஈழப் போராளிகள் தமிழன் கையாலேயே நடுவீதியில் துடிதுடித்துச் சாக வேண்டும் என்பதற்காகக் கொடுத்தீர்களா?
ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதற்காக வழங்கினீர்களா?
ஈழ விடுதலைப் போராட்டத்தை அடியோடு அழித்து உருக்குலைத்துச் சிதைத்துவிட வேண்டும் என்பதற்காகக் கொடுத்தீர்களா— இல்லையில்லை......
எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும், நீங்கள் அப்படிச் செய்யவில்லை

ஈழம் மலர வேண்டும்!
அங்கு சமதர்மப் பூங்கா உருவாக வேண்டும்!
ஈழத்து மக்கள் சுதந்திரப் பள்ளுப் பாட வேண்டும்!
என்றுதான் உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமுகமாகக் கைகோர்த்து நின்றனர்.
ஆனால், தமிழ் மக்கள் புலிகளுக்கு ஆதரவளித்தது,
அள்ளிக் கொடுத்தது எல்லாம் இன்று எதிரிக்குப் பயன்படுகின்றன என்பதைச் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு நாங்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று நம்பி, எதிரிகளின் தலைகளைப் பந்தாடுவதில் புலிகள் சாகசம் செய்கிறார்கள் என்று ஏமாந்த தமிழ் மக்கள் மட்டுமல்ல குற்றவாளிகள்;

நாங்களும் குற்றவாளிகள்தான்!

எப்படி என்று கேட்கிறீர்களா?

புலிகளும் விடுதலைப் போராளிகள்தான் என்று நாங்களும்தான் நம்பினோம்! அவர்களுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டிக் கொண்டோம்.

என்னதான் தவறுகளிருந்தாலும் புலிகளும் ஈழத்தின் சுதந்திரத்திற்காகத்தானே போராடுகின்றார்கள்,

அவர்களையும் அரவணைத்துச்செல்ல வேண்டியது எங்களின் வரலாற்றுக் கடமையென்று நாங்களும் நம்பினோம் என்பது உண்மை.

ஐக்கியத்துக்காக எவ்வளவு விட்டுக்கொடுப்புகளைச் செய்தோம்! எவ்வளவு இழப்புகளை ஏற்றுக்கொண்டோம்! எத்தனை அவமானங்களைத் தாங்கிக்கொண்டோம்! எத்தனை வகைப்பட்ட பொய்ப் பிரச்சாரங்களுக்கு உட்பட்டோம்!

இவற்றை எல்லாம் நாங்களும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்! பரவாயில்லை. கடந்த காலம் கடந்த காலமாகவே இருக்கட்டும்; இனி வருங்காலமாவது நல்லதாக அமையட்டும்.

நீங்களும் சரி, நாங்களும் சரி கடந்த காலத்தைப் பற்றிய சுய விமர்சனத்தோடு எதிர்காலப் போராட்டததை விழிப்போடும் எச்சரிக்கையோடும் அமைத்துக்கொள்வோமாக!

ஈழவிடுதலையின் பேரால் சிறீலங்கா அரசுக்குத் துணைசெய்பவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகள், நச்சுப் பாம்புகள் போல் நம் மத்தியில் நடமாடிவருவதை நாம் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

நாம் விழிப்பாக இல்லையென்றால், நாளை அத்துலத்முதலி கூட தனக்கும் ஒரு தமிழ்ப்பெயரை வைத்துக்கொண்டு, ஈழப் போராளி போல் வேஷம் போட்டு ஒரு ஈழவிடுதலை இயக்கத்தைத் தொடங்க, நீங்களும் ஆதரவளிக்க—

நாங்களும் ஐக்கிய முன்னணியைக் கட்ட......

அப்படியான ஒரு மக்குகள் அல்ல நாங்கள் என்பதை வரலாற்றில் நிரூபிப்போம்!

**புலிகளின் தாகம் ரத்தம் தானோ?**

சிறீலங்கா அரச படைகளுக்கு எதிராக ஆயுதமெடுத்துச் சுழற்றி விளையாடுபவர்களெல்லாம் ஈழத்தை வென்றெடுத்துத் தந்து விடுவார்கள் என்று நம்பினோமானால் நாம் ஏமாளிகளாவோம்.

படிப்பகம்

www.padippakam.com



ராணுவக் சட்டுப்பாடு, ராணுவ ஒழுங்கு, ராணுவத் திறன் என்பதன் பெயரால் புலிகள் ஈழப்போராளிகள்மீது நடத்திய கொடூரமான வரலாறு ஒன்று நீண்டகாலமாக உண்டு.

அந்த வரலாற்றை நாங்கள் உங்களுக்குச் சொல்லவில்லை காரணம் — நீங்கள் எங்களைச் சொல்ல விடவில்லை.

எப்படி இந்தப் புலிகள் தோன்றியது?

எப்படி இந்தப் புலிகள் வளர்ந்தது?

எப்படி இந்தப் புலிகள் கடிக்க ஆரம்பித்தது?

என்கின்ற வரலாற்றை நீங்கள் சரியாகக் கண்டுகொள்வீர்களானால்,

புலிகள் தமிழ் ஈழத்திற்காகப் போராடுகின்றார்களா?

அல்லது, ஈழப் போராளிகளைக் கீறிக் கிழித்து, தங்களது ரத்த தாகத்தைத் தீர்த்துக்கொள்ளப் போராடுகின்றனவா?

என்பதனைப் புரிந்து கொள்வீர்கள்.

நூற்றுக்கு மேற்பட்ட ஈழப் போராளிகளைக் கொன்று குவித்ததோடு மட்டும் புலிகளின் ரத்த வெறி தீர்ந்துவிடவில்லை என்பதனை இனிய தமிழ்மக்களின் காதுகளுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றோம்.

இது கால வரையும் புலிகளை வளர்ப்பதற்காக நீங்கள் பல தியாகங்களைச் செய்திருக்கின்றீர்கள்.

ஆனால், இப்பொழுது ஈழப்போராட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டுப் புலிகளை அடக்கி, திருத்தி நல்வழிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நீங்கள் தியாகம் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

இந்த வரலாற்றுத் தேவையை உணராமல், புலிகளுக்கு நீங்கள் தொடர்ந்தும் கொழுப்பேற்றுவீர்களேயானால் ஈழத்து மண்ணை எலும்புக்கூடுகள்தான நிறைத்து நிற்கும்.

கண்ணாடி பத்மநாதன், சுதுமலை பற்குணம், மட்டக்களப்பு மைக்கல், சுந்தரம், தேவன், மனோமாஸ்டர், ஜெகன், அமீன்...... இப்படித் தனித் தனியாகக் கடித்துக் குதறி வந்த புலிகள், இன்று நூற்றுக்கணக்கான போராளிகளின் ரத்தத்தை ஒரே நேரத்தில் குடித்திருக்கின்றன.

இவை மட்டுமல்ல, இன்னுமொரு விஷயமிருக்கிறது,

புலிகளுக்குள்ளே தூய புலிகளாக இருக்க விரும்பாமல் வெளியேறிய பலர், இன்று கண்ணுக்குத் தெரியாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடூரங்களெல்லாம் எப்படி நடந்து முடிந்தன என்று சிந்திக்கிறீர்களா? சிந்தியுங்கள்! மீண்டும் மீண்டும் சிந்தியுங்கள்! கேள்விகளைத் தொடர்ச்சியாக எழுப்புங்கள்!

படிப்பகம்

www.padippakam.com



விடை காணுவதற்காக விடாது முயற்சியுங்கள்!
நாங்கள் சொல்வதையும் சிறிது கேளுங்கள்!

எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு ஆயுதமும், ஆயுதப் பயிற்சியும் மட்டும் போதாது; அரசியல் அறிவும், அரசியல் நெறியும், அரசியல் தலைமையும் அவசியமாகும்.

அரசியல் இல்லாத ஆயுதக் களங்களில் பாசிசத்தின் வேர்கள் மிகச் சுலபமாகவே பற்றிக் கொள்ளும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீண்டும் மீண்டும் சொல்வது இதுதான்:

சுதந்திர ஈழம் மலர வேண்டுமானால்,
அங்கு ஜனநாயகம் நிறைந்திருக்க வேண்டுமானால்,
அதில் சோஷலிசப் பூங்கா உருவாக வேண்டுமானால் —

ஈழத்துக்காகப் போராடும் விடுதலை அமைப்பு என்பது, உட்கட்சி ஜனநாயகத்தின் அடிப்படையில் எழுந்த அரசியல் ஸ்தாபனத்தினால் ஈழவிடுதலைப் போராட்டம் தலைமை தாங்கப்பட வேண்டும்.

புரட்சிகர ஜனநாயக முன்னணி ஒன்றில்லாமல் ஈழத்தில் புரட்சி என்பது நடைபெறமுடியாது.

ஈழப்போராளிகளின் ஜனநாயகமும் சுதந்திரமும் இப்போதிருந்தே மதிக்கப்பட வேண்டும்.

இயக்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளைத் துப்பாக்கிகளால் தீர்க்க முயலக் கூடாது.

— இவை வெறும் வாக்கியங்களல்ல; ஈழப்போராட்டத்திற்கு அவசியமான கோட்பாடுகள்.

எமதினிய தமிழ் மக்களே!

இக்கோட்பாட்டு நெறிகளைக் கடைப்பிடித்துச் செயற்படுபவர்களை ஆதரவு கொடுத்துப் பலப்படுத்துங்கள்.

ஈழப்போராட்டத்தின் பெயரால் ரத்தவெறி பிடித்து அலைபவர்களைப் புறக்கணியுங்கள் — நிராகரியுங்கள்.

எந்த ஒரு ஈழப் போராளியினதும் தனி மனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துங்கள் —
அதற்காகப் போராடுங்கள்.

இராணுவ சாகஸ வீரர்கள் எதிர்காலத்தின் சர்வாதிகாரிகள் என்பதனைத் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளுங்கள்,

இந்த விடயத்தில் தவறி விடுபவர்கள் ஒவ்வொருவரும் ஈழப்போராட்டத்திற்கு எதிராக, சிறீலங்கா அரசுக்குத் துணையாக நிற்பவர்கள் என்பதனைத் தெரிந்து கொள்ளுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



1986 கார்த்திகை-மார்கழி

## இனிய தமிழ் மக்களே!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் யார்?

ஈழமக்களுக்காக புரட்சிகரமான விடுதலையை வென்றெடுக்க முன்னணியில் நின்று போராடுபவர்களே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்......

எங்களின் இலட்சியத் திட்டங்கள் என்ன?

எங்களின் செயற்பாடுகள் எவ்வகைப்பட்டவை?

எங்களுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் என்னென்ன வேறுபாடுகள்? — இதுபோன்ற கேள்விகள் உங்கள் மனங்களில் தோன்றுவது இயல்பானதே.

நாங்கள் பாரம்பரியப் பெருமைகளைப் பேசி உங்களை ஏமாற்றுபவர்களல்ல; எங்களைப்பற்றி பொய்யான பிரமைகளை உங்களுக்கு ஊட்டுபவர்களல்ல;

உங்கள் மத்தியில் பிரபல்யம் அடையும் குறுகிய நோக்கங்களுக்காக எங்கள் பாசமிகு தேசமக்களைப் பலி கொடுக்கும் (பணப்) புதையல் தேடிகளுமல்ல......

எங்கள் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்கள் கூறியது போல," மக்களில்லாத மண்ணை நேசிப்பவர்களல்ல நாங்கள் மக்களை நேசிப்பவர்கள். மக்களுக்காக மண்ணை நேசிப்வர்களே நாங்கள்"

புதியதோர் உலகம் செய்வோம்!, என்றார் பாரதிதாசனார்.

நாங்கள் புதியதோர் ஈழம் படைக்கப் புறப்பட்ட புதுயுகப் புரட்சியாளர்கள்-

எங்கள் தேசத்தின் விடுதலை என்பது... எங்கள் தேசத்திலுள்ள அனைத்து மக்களுக்குமானஉண்மையான, முழுமையான விடுதலையைக் காணப் புறப்பட்ட சமுதாயப் புரட்சியாளர்கள்.

ஈழ தேசத்திலிருந்து சிறீலங்கா அரசின் கூலிப் படைகளை விரட்டுவது அல்லது ஒழித்துக் கட்டுவது,

ஈழ தேசத்தின் இறைமையை வென்றெடுக்கும் வகையில் ஈழத்தின் மீதான சிறீலங்கா அரசின் அதிகாரத்தை இல்லாமல் ஆக்குவது என்பது மட்டுமல்ல எங்கள் இலக்கு.

வெறுமனே 'ஈழம்' என்னும் பெயர்ப் பலகைக்காக இத்தனை இழப்புக்களையும்; துன்பங்களையும் எங்கள் மக்கள் தாங்கிக் கொள்ளவில்லை.

சுதந்திர ஈழத்தில் பிற்போக்குக் கும்பல்கள் ஆதிக்கம் வகிப்பதற்காக நாங்கள் இத்துணை போராட்டத்தை நடத்தவில்லை.

படிப்பகம

www.padippakam.com



அனைத்து ஈழமக்களுக்குமான உண்மையான ஜனநாயகம் நிலவ வேண்டும்.

இங்கு பணக்காரர்கள் ஏழைகளை ஏமாற்றும் நிலை இல்லாத நிலை வேண்டும். முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டாத நிலை வேண்டும். நிலமுள்ளவர்கள் நிலமில்லாதவர்களை ஒடுக்கும் நிலை மாற வேண்டும். உயர்த்தப்பட்டவர்களை ஒடுக்கும் நிலை மாற வேண்டும். உயர்த்தப்பட்ட சாதியினர் என்னும் நிலை ஒழிய வேண்டும். எமது தேசத்துப் பெண்கள் விடுதலை பெற்றவர்களாக வீதிவலம் வர வேண்டும்.

இவற்றுக்காகவே நாங்கள் போராடுகின்றோம்.

மூடநம்பிக்கைகளின் கூடமாக இல்லாத ஈழம் வேண்டும்.

அதே வேளை, சமுதாயத்தின் முற்போக்கான வளர்ச்சியைப் பாதிக்காத தனி மனித சுதந்திரம் முழுமையாக நிலவ வேண்டும்.

மத வேறுபாட்டாலோ, பிரதேச வேறுபாட்டாலோ மக்களைப் பிளவுபடுத்தி மோதவிடல் என்பது இல்லாத நிலை வேண்டும்.

மதவழிபாடு என்பது தனிமனித சுதந்திரந்தான். ஆனால், மதத்தின் பேரால் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர் கூட்டம் இல்லாத வகையில் ஒட்டறுக்கும் ஈழம் வேண்டும்.

இவற்றை நிலைநாட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் இறுதி வெற்றிவரை உறுதியுடன் போராடியே தீருவோம்.

தம்மிடமுள்ள சிறு நிலத்தில் விளையும் விளைச்சலும் போதாமல், தம் கையில் எஞ்சியவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து குடும்பத்தின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் குடியான விவசாயிகள், எமது தேசத்து விவசாயிகளில் 80 விழுக்காடு (சதவீதம்)

இந்தக் குடியான விவசாயிகளின் குட்டிச்சுவரான வாழ்க்கையில் முன்னேற்றம் தருகின்ற ஈழம்தான் எமக்கு வேண்டும்.

மூன்று வேளை கஞ்சிக்கும் போதாத கடுகளவு கூலிக்கு, நாள் முழுதும் தோளை முறித்து வேலை செய்யும் தொழிலாளர்களை, மூலதனத்தைக் குவித்து வைத்துள்ள முதலாளிகளின் கொடூரமான சுரண்டல் கொடுமையிலிருந்து விடுவிக்கும் சுதந்திரமே எமக்கு வேண்டும்.

வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு வீதியில் திரிய வேண்டிய சமுதாயக் கட்டாயத்துக்கு உள்ளான,

குமாஸ்தாக்களும், ஆசிரியப் பெருந்தகைகளும்

இயந்திரம்போல் வேலை செய்தும், அவர்கள் வாழ்க்கையில் நிலை மாறா நிலை மாற்றும் தேசம் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

**தோழர்களே !**

இந்தவகையான பல நபர்கள் பல உருவங்களில் — பல போர்வைகளில் விஷமத்தனமான நோக்கங்களுடன் நடமாடி வருகிறார்கள்.

உழைக்கும் வர்க்கத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டே அந்த வர்க்கத்திற்குத் துரோகம் செய்வதையே இந்த நபர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்றைய அகப்புறச் சூழ்நிலைகளையும், காலத்தின் தேவைகளையும் புரிந்துகொள்ளாத —

இவர்களின் அதி தீவிரவாதப் போர்வைக்குள் மறைந்து கிடக்கும் சந்தர்ப்பவாதங்களையும்,

ஸ்தாபன சீர்குலைப்பு நோக்கங்களையும்... நாம் அடையாளம் கண்டு விழிப்போடு செயற்படுவது அவசியமாகும்.

**மக்கள் தொடர்பாகவும்**
**கட்சி தொடர்பாகவும்**
**தெளிவான புரிதலோடு**
**நிதானமாகச் செயற்படுவோம் !**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



"நாம் மக்களுக்காகப்
போராடுவது
எம்மேல் சுமத்தப்பட்ட
கடமையே தவிர
எமக்கு வழங்கப்பட்ட
அதிகாரம் அல்ல."

— தோழர் க.பத்மநாபா —

படிப்பகம்